செய்தி வெளியீடு எண். 34-2017 நாள்: 21.01.2017

# விழுப்புரம் மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் குடிநீர் தொடர்பான புகார்களைத் தெரிவிக்க தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ளார்.

*****

2016-17ஆம் வருடத்தில் பருவமழை வழக்கத்தைவிட 47% குறைவாக பெய்துள்ளதால், பல்வேறு ஊராட்சிகளில் நீர்மட்டம் குறைந்து வருவதினாலும் வருகின்ற கோடைக் காலத்தில் குடிநீர் வழங்குவதில் மிகுந்த சிரமம் ஏற்படும் நிலை உள்ளதால் திட்டமிட்ட வகையில் குடிநீர் பிரச்சனையை தவிர்த்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் குடிநீர் தொடர்பான புகார்களைத் தெரிவிக்க தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்பட்டுள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) அவர்களின் தொலைபேசி எண்கள் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

குடிநீர் விநியோகத்தில் ஊரகப் பகுதிகளில் ஏதேனும் பிரச்சனை ஏற்படும் நிலையில் கிராமப்புற பொதுமக்கள், நியமனம் செய்யப்பட்டுள்ள தங்கள் ஊராட்சி ஒன்றியத்தினை சேர்ந்த பொறுப்பு அலுவலர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களது புகார்களை தெரிவிக்கலாம்.

விழுப்புரம் கோட்டத்தில், காணை ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஆர்.வெங்கடசுப்பிரமணியன் அவர்களின் தொலைபேசி எண்.7402902991 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04146-234102, கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.டி.ரவிச்சந்திரன் அவர்களின் தொலைபேசி எண்.7402903009 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04146-260313, கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எம்.உத்தண்டராமன் அவர்களின் தொலைபேசி எண்.7402903025 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.0413-2645129, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பி.எழிலரசு அவர்களின் தொலைபேசி எண்.7402903041 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04146-233103, ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.டி.துரைமுருகன் அவர்களின் தொலைபேசி எண்.7402903059 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04147-238315, மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வி.சந்திரபாபு அவர்களின் தொலைபேசி எண்.7402903077 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04147-237423, மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வி.பன்னீர் அவர்களின்

தொலைபேசி எண்.7402903094 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04147-239211, வானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.என்.மணிவண்ணன் அவர்களின் தொலைபேசி எண்.7402903112 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.0413-2677310, செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஜி.சிவக்குமார் அவர்களின் தொலைபேசி எண்.7402903131 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04145-222011, வல்லம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எம்.சரவணகுமார் அவர்களின் தொலைபேசி எண்.7402903150 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04145-235241, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சி.இளங்கோவன் அவர்களின் தொலைபேசி எண்.7402903169 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04145-234231 ஆகிய எண்களையும்,

கள்ளக்குறிச்சி கோட்டத்தில், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சி.ஆர்.சிவனேசன் அவர்களின் தொலைபேசி எண்.7402902903 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04153-252922, முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.கஸ்தூரி அவர்களின் தொலைபேசி எண்.7402902921 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04153-224769, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.ஜெயராமன் அவர்களின் தொலைபேசி எண்.7402902940 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04153-234232, திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எம்.முருகன் அவர்களின் தொலைபேசி எண்.7402902957 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04149-224221, உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பி.ஆறுமுகம் அவர்களின் தொலைபேசி எண்.7402902973 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04149-220315, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வி.சக்கரவர்த்தி அவர்களின் தொலைபேசி எண்.7402903187 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-222730, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வி.ஐயப்பன் அவர்களின் தொலைபேசி எண்.7402903203 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-236535, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.டி.சரவணன் அவர்களின் தொலைபேசி எண்.7402903222 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-239575, சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எஸ்.திருவரசன் அவர்களின் தொலைபேசி எண்.7402903240 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-254118, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஜெ.செல்வபோதகர் அவர்களின் தொலைபேசி எண்.7402903256 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-233206, கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சிவக்குமார் அவர்களின் தொலைபேசி எண்.7402903271 மற்றும் அலுவலக தொலைபேசி எண்.04151-242229 ஆகிய எண்களையும், தொடர்பு கொள்ளலாம்.

பொறுப்பு அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை தனி பதிவேடுகள் தொடங்கி பதிவு செய்யப்பட வேண்டும். அவற்றில் புகார்தாரரின் தொலைபேசி எண்ணையும் பதிவு செய்திட வேண்டும்.

குடிநீர் பிரச்சனைகள் பெரிய அளவில் ஏற்படாமல் ஆரம்ப நிலையிலேயே தவிர்த்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதால் குடிநீர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், மின் மோட்டார் பழுது, குடிநீர் குழாய் பழுது, நீர் மட்டம் கீழே செல்வது, மின் இணைப்புகள் பழுது போன்ற பழுதுகளின் விவரங்களை கண்டறிந்து உடனுக்குடன் பழுது நீக்கம் செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிநீர் பிரச்சனைகள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் சரிசெய்திட இயலாதபட்சத்தில் உடனடியாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி ஆகியோர்களுக்கு தெரிவித்திட பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொது மக்கள் தங்கள் பகுதியில் குடிநீர் பிரச்சனைகள் ஏற்படின் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி)களும், ஊராட்சி ஒன்றிய அளவில் பிரச்சனை தீர்க்கப்படவில்லை எனில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களை (04146-227168) என்ற எண்ணிலும், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களை (04151-226577) என்ற எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம்.

வறட்சி நிலவிடும் சூழ்நிலையில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் தடையின்றி குடிநீர் வழங்கிட வேண்டியுள்ளதால், ஊராட்சியில் குடிநீர் தொட்டி (Sump) கட்டி தண்ணீர் பிடித்தல், மோட்டார் வைத்து பொது குடிநீர் குழாய்களில் தண்ணீர் உறுஞ்சுதல், தோட்டப் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுதல், பள்ளங்கள் தோண்டி தண்ணீர் பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் எவரேனும் ஈடுபட்டால் அவர்கள் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அவ்வாறு முறையற்ற வகையில் குடிநீரினை பயன்படுத்துபவர்கள் குறித்து மேற்காணும் தொலைபேசி எண்களில் புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு தெரிவித்தார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.